orientation
orientamento
berufsberatung
.ch

Informationen in anderen Sprachen
Informations en langues étrangères
Informazioni in lingue straniere

# வெளிநாட்டு டிப்ளோமாக்களை அங்கீகரிப்பது

நீங்கள் சுவிசில் ஒரு தொழிற்கல்வியையோ அல்லது ஒரு தொழிலையோ பெற விரும்பினால், தொழில் சந்தையில் உங்களுக்குப் பொருத்தமான ஒரு இடத்தைக் கண்டுகொள்வது முக்கியமானதாகும். அதற்கு நீங்கள் உங்கள் தாய்நாட்டில் பெற்ற டிப்ளோமாக்கள் மற்றும் கல்வித் தகமைகளை சமர்ப்பித்து அவற்றை சுவிஸ் தகமைகளுடன் ஒப்பிட்டுக் கொள்ள முடியும்.

நீங்கள் உங்கள் தாய்நாட்டில் ஒரு தொழிற்கல்வியைக் கற்று முடித்து ஒரு டிப்ளோமாவை மற்றும் வேறு தகமைகளை அல்லது வேறு சான்றிதழ்களை, ஒரு உறுதிப்பத்திரத்தை அல்லது ஒரு பெறுபேற்று மடலைப் பெற்றுள்ளீர்களா? அவ்வாறெனில் அந்த டிப்ளோமாவை நீங்கள் சமர்ப்பித்து அது சுவிசில் எத்தகைய „பெறுமதியைக்“ கொண்டது எனப் பரிசோதித்துக் கொள்ள முடியும்.

இதன்மூலம் நீங்கள் ஒரு தொழிலுக்குத் தகுந்த தகமையைக் கொண்டுள்ளீர்களா எனத் தொழில் வழங்குனரால் மதிப்பிட்டுக் கொள்ள முடியும்: இவ்வாறான மதிப்பீடு ஒரு தொழில் கிடைக்கும் என்ற உறுதிப்பாட்டைக் கொடுக்கா விட்டாலும், தொழிற் சந்தையில் உங்களுக்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கும். அத்துடன் தொழிற்கல்வியைப் பொறுத்தமட்டில் நீங்கள் அதைக் கற்பதற்குரிய தகுதியைக் கொண்டுள்ளீர்களா என சோதித்துக் கொள்ள முடியும். சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நீங்கள் மேலும் கற்று சுவிஸ் அரச தகமைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

சுவிசில் -உயர்கல்விப் பகுதிகள் ஒவ்வொன்றையும் பொறுத்து- பல்வேறு இடங்களில், உங்கள் கற்கையை, தொழில் மற்றும் துறைசார் அளவிற்கு உறுதிப்படுத்தலாம், உங்கள் டிப்ளோமா அல்லது உங்கள் தகமைச் சான்றிதழ்களை அங்கீகரிக்கச் செய்யும் வசதி உள்ளது. அதிகமான இணையத்தளங்களான, கீழே தரப்பட்டுள்ளவைகளில், டொச், பிரெஞ்சு மற்றும் இத்தாலிய மொழிகளில் மற்றும் சிலவற்றில் ஆங்கிலத்திலும் அறிந்து கொள்ளலாம்.

## பல்கலைக்கழக டிப்ளோமா

பொறுப்பு வகிப்பது சுவிஸ் உயர்கல்லூரி அதிபர்கள் சங்கம்:
https://www.swissuniversities.ch/de/services/anerkennungswiss-enic
உங்கள் உயர்கல்வித் தகமை, உங்கள் மத்துாறா, உங்கள் துறைசார் உயர்கல்வித் தகமைகள் அல்லது தொழிற்கல்வித் தகமை ஒரு பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தைக் கொண்டுள்ளதா என, உயர் கல்லூரி முடிவுசெய்யும்.

## தொழிற்கல்வி மற்றும் துறைசார் உயர்கல்லூரி டிப்ளோமா

தொழிற்கல்விப் பகுதிகளுக்கு (சமூகசேவைப் பகுதி, தொழிற்சாலை, கைவேலை, வியாபாரம், விற்பனைப் பகுதி, அலுவலகம் உணவகம், வீட்டு நிர்வாகம், சேவை வழங்குவது போன்றவை) தொழிற்கல்வி, ஆய்வுசெய்தல் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான அரச செயலர் பொறுப்பு வகிப்பார் SBFI: www.sbfi.admin.ch > தலையங்கம் > வெளிநாட்டில் பெற்ற டிப்ளோமாவை ஏற்றுக்கொள்ளுதல். அங்கு அங்கீகரிக்கும் விடயமாக அதற்கு ஏற்புடைய வித்தியாசமான பகுதிகளுக்கான நிறுவனங்களின் பட்டியல் ஒன்று இருக்கும். இதன்போது விசேடமாக தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம், கட்டிட வரைஞர், கட்டிட- மற்றும் திட்டமிடும்பகுதி, இரசாயன மற்றும் வாழ்க்கை விஞ்ஞானம், நிலம்- மற்றும் வனவியல், பொருளாதாரம் மற்றும் சேவை செய்யும் பகுதிகள், வடிவமைப்பு, சமூகசேவை, இசை, நாடகம் மற்றும் வேறு கலைகள் அதேபோன்று பாவிக்கும் மொழிவளம் போன்றவற்றில் டிப்ளோமா பெறுவதாகும்.

### அங்கீகரிப்பதற்கான தகுதிகள்:

- உங்கள் தொழிற்கல்வி (கட்டாய பாடசாலை உட்பட) கட்டாயமாக சுவிஸ் தொழிற்கல்வியுடன் ஒப்பிடும்போது அந்தளவு காலம் கற்றிருக்க வேண்டும்.
- உங்கள் தொழிற்கல்வி, பாடங்களாகக் கற்பதுடன் சேர்த்து செய்முறை அனுபவங்களையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

- உங்கள் தொழிற்கல்வி அரச திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பரீட்சையில் சித்தி பெற்றதாக நிறைவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.
- உங்கள் தொழிற்கல்வி சுவிசிலும் இருப்பதுடன் தொழிற்கல்விச் சட்டத்தால் ஒரு தொழில் குறித்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- நீங்கள் ஒரு குறிப்பிட்ட அளவில் மொழி அறிவைக் கொண்டிருப்பதாக உறுதிப்படுத்த வேண்டும் (பே2 முதல் சி2 யெர்மனிய முறைப்படி)

### ஐரோப்பிய முதல்சுற்று ஒன்றியம்/இரண்டாம் சுற்று ஒன்றியம்

சுவிசும் ஐரோப்பிய முதல்சுற்று /இரண்டாம் சுற்று ஒன்றியமும் அரசால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள தொழில்களுக்கான தமது டிப்ளோமாக்களை இரு பக்கங்களிலும் பரஸ்பரமாக அங்கீகரிக்கின்றனர். அங்கீகரிக்கும் நடைமுறைகள் குறித்து அதற்குப் பொறுப்பான நிலையங்கள் அறியத்தருவார்கள்.

## சட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ள தொழில்கள்

சுவிசில் பல தொழில்கள் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளன. அதன் அர்த்தம் என்னவென்றால், தமது தொழிலைக் கற்ற பின் உத்தியோகபூர்வமான அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும். இவை உதாரணமாக சுகாதாரப் பகுதி, கல்விப்பகுதி, சமூகசேவை அல்லது நீதி வழங்குவது போன்ற தொழில்களுக்கு அமைந்திருக்கும். உதாரணமாக: கட்டிடப் பொறியியலாளர்கள், பூகோளப் பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், சமூகசேவையாளர்கள், ஆசிரியர்கள், மொழி பழக்குனர்கள், வைத்தியர்கள், பல்வைத்தியர்கள், மிருக வைத்தியர்கள், மருந்து வழங்குனர்கள் போன்றோர்.

### பொறுப்புவகிக்கும் நிலையம்:

#### சுகாதாரத்துறை

பல்கலைக்கழகமற்ற தொழில்கள் (உ-ம். துறைசார் பராமரிப்புப் பெண், அப்பியாசம் பழக்குவோர், உணவு ஆலோசகர்கள்): சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம் www.redcross.ch

பல்கலைக்கழகத் தகுதியுடனான தொழில்கள் (உ-ம். வைத்தியர்கள், பல்வைத்தியர்கள், மிருக வைத்தியர்கள், மருந்து வழங்குனர்கள்): சுகாதாரத்துக்கான மத்திய அமைச்சு BAG www.bag.admin.ch

உளவியலாளர்: உளவியல் தொழில்களுக்கான பேரவை psyko@bag.admin.ch

எலும்புநோய் வைத்தியர்: மாநில சுகாதார அதிபர்கள் சங்கம் www.gdk-cds.ch

#### கல்வித்துறை

ஆசிரியர்கள், பாடசாலை ஆரோக்கிய கற்பித்தல் பயிற்றுனர்கள், மொழிப் பயிற்சியாளர், உளவள இயக்கப் பயற்சியாளர்கள்: மாநில உயர்கல்வி அதிபர்கள் சங்கம் EDK www.edk.ch

தொழிற்கல்வி கற்ப்பிப்பவர்களுக்கான கல்வி: தொழிற்கல்விக்கான மாநில அமைச்சு www.sbbk.ch

#### சட்டம்

மாநில நீதிமன்றங்கள். நீதித்துறைக்குப் பொறுப்பான நிலையங்களின் பட்டியலை இங்கு காணலாம் www.swissuniversities.ch

#### தொழில்நுட்பம்

ஒவ்வொரு மாநிலத்தைப் பொறுத்து கட்டிடக் கலைஞர் மற்றும் பொறியியலாளர் தொழில்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்த தகவல்களை www.swissuniversities.ch இல் காணலாம்.

பூகோளப் பொறியியலாளர் தொழிலுக்கு பூகோளப்-பதிவு ஒன்று தேவைப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்கு (Download Merkblatt.).

#### பொருளாதாரம்

உணவகம்: உணவகத் தொழில் நடைபெறும் மாநில தொழில் திணைக்களம்: www.ch.ch.

கணக்காய்வாளர், உயர் கணக்காய்வாளர்: சுவிஸ் மத்திய அரச கணக்காய்வுத் திணைக்களம் RAB www.rab-asr.ch

## சமூகசேவை

சமூகசேவையாளர்களுக்கான தொழில்களுக்கு SBFI: , தொழிற்கல்வி, ஆய்வுசெய்தல் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான அரச செயலர் பொறுப்பு வகிப்பார் www.sbfi.admin.ch

## சொந்தத்தொழில்கள்

மாநில தொழில் திணைக்களம் www.ch.ch